# உழவன்

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## வேளாண்மை அறிவியல் நிலையம்

சிக்கல், நாகப்பட்டினம் – 611 108

**ஏப்ரல் - ஜுன் 2016**


### ஆசிரியர் உரை



உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே !

என்னும் கூற்றுக்கிணங்க உயரிய வேளாண்மை தொழில் செய்து வரும் நாகப்பட்டினம் மாவட்ட உழவர் பெருமக்களிடம் கடந்த 3 மாதங்களில் (ஏப்ரல் - ஜுன் 2016) இந்நிலையம் மேற் கொண்ட பல்வேறு பணி-களைப் பகிர்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

- அன்புடன் ஆசிரியர்

### ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த தொழில்நுட்ப பயிற்சி



இந்நிலையத்தின் சார்பாக மயிலாடுதுறை வட்டாரம் ஆத்தூர் கிராமத்தில் விவசாயிகளுக்கு 30.05.2016 அன்று காலை 10.30 மணியளவில் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த ஒருநாள் தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியைத் துவக்கி வைத்து திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் அ.அனுராதா ஒருங்கிணைந்த பண்ணையம் செய்வதால் பண்ணைக் கழிவுகள் மறுசுழற்சி மற்றும் வருடம் முழுவதும் நிலையான வருமானம் பெறலாம் என்பது குறித்துத் தெளிவாக எடுத்துரைத்தார். வனவியல் உதவிப் பேராசிரியர் முனைவர் ரா.ரவி அவர்கள் ஒருங்கிணைந்த பண்ணையம் அமைக்கும் முறை, தேர்ந்தெடுக்கும் முறை அதில் வேளாண் தொழில்களை மற்றும் அதிக இலாபம் ஈட்டும் வழிமுறைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். இந்தப் பயிற்சியில் 35 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். பயிற்சியில் இந்நிலைய உதவிப் பேராசிரியர் முனைவர் மு. அழகர் கலந்து கொண்டு ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்து எடுத்துரைத்தார்.

### நுண்ணீர்ப் பாசன பாராமரிப்பு தொழில்நுட்ப பயிற்சி



இந்நிலையத்தில் 02.06.2016 அன்று நுண்ணீர்ப் பாசன பராமரிப்பு பற்றிய தொழில்நுட்ப பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியினைப் புதுதில்லி, இந்திய அரசு இயக்குநர் (விரிவாக்கம்) திரு. விஜயராஜமோகன் தொடங்கி வைத்து தற்போதைய சூழ்நிலையில் நீரைச் சிக்கனமாகவும், பயனள்ள வகையிலும் பயன்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார். தோட்டக்கலை உதவிப் பேராசிரியர் முனைவர் ம.தமிழ்ச்செல்வன் அவர்கள் நுண்ணீர்ப் பாசன பராாமரிப்பு முறை குறித்து தொழில்நுட்ப பயிற்சி அளித்தார். நாகை மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் விஜயகுமார் அவர்கள் பயிற்சியின் முக்கியத்துவம் பற்றியும், ஜெயின் இரிகேஸன் முதுநிலை உதவியாளர் திரு. தவசிராஜன் நுண்ணீர்ப்பாசன பராமரிப்பு செயல்முறை விளக்கங்களையும் எடுத்துரைத்தனர். இப்பயிற்சியில் நாகை மாவட்டத்தைச் சேர்ந்த 66 விவசாயிகள் கலந்து கொண்டனர். முனைவர் ப.காமராஜ் உதவிப் பேராசிரியர் (பண்ணை இயந்திரவியல்) வரவேற்புரையாற்றினார். முடிவில கீழ்வேளூர் வேளாண்மை உதவி இயக்குநர் உதயகுமார் நன்றி கூறினார். பயிற்சியின் ஏற்பாடுகளை நிலையத்தின் தொழில்நுட்ப அலுவலர் திரு.வீ.ஞானபாரதி, பண்ணை மேலாளர் திரு.ரெ.வேதரெத்தினம் ஆகியோர் செய்திருந்தனர்.



### பண்ணை கழிவு மேலாண்மை - தொழில்நுட்ப பயிற்சி

03.06.2016 அன்று நிலையத்தில் பண்ணைக்கழிவு மேலாண்மை குறித்த ஒருநாள் பயிற்சி நடத்தப்பட்டது. 23 விவசாயிகள் பயனடைந்தனர். பயிற்சியாளர்கள் நிலையத்தில் நிர்மானிக்கப்பட்டுள்ள மண்புழு உரம் தயாரிப்பு, தென்னை நார் கழிவு உற்பத்தி, அசோலா உற்பத்தி உட்பட்ட அனைத்து மாதிரிகளையும் கண்டு அது தொடர்பான தொழில்நுட்ப விவரங்களைக் கேட்டு பயனடைந்தனர்.

## ஒத்த பகுதிக்கான பயறு வகை பயிர்களில் முதல்நிலை செயல்விளக்கம் 2015 - 2016 - வயல்விழா



இந்நிலையத்தின் சார்பாக 2015 - 16 ஆம் ஆண்டிற்கான பயறு வகைகளில் முதல்நிலை செயல் விளக்கம் ஏழு கிராமங்களில் 63 செயல் விளக்கங்களாகச் சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்தச் செயல் விளக்கத்தில் விவசாயிகளுக்குப் பச்சைப் பயிர் கோ.8 இரக விதையும், உளுந்து வி.பி.எ - 6 உடன் விதை நேர்த்தி செய்ய சூடாமோனாஸ், ரைசோபியம், சவ்வும் வழங்கப்பட்டது. மேலும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த இனக் கவர்ச்சி பொறி, மஞ்சள் நிற ஒட்டும் அட்டை மற்றும் இன்டாக்சிகார்ப் பூச்சிக்கொல்லியும் வழங்கப்பட்டது. மேலும் பயிர் ஊக்கியாக த.வே.ப. கழக பயிறு அதிசயமும் வழங்கப்பட்டது. இந்த இடுபொருட்கள் பயன்படுத்தும் முறைகள் செயல்விளக்கமாகவும் செய்து காட்டப்பட்டது. இந்தப் புதிய இரகங்களின் மூலம் விவசாயிகள் அவர்களுடைய வருட சராசரி விளைச்சலை விட அதிக விளைச்சலைப் பெற்று அதிக வருமானம் ஈட்டினர். இந்தக் கவற்றியை அந்தக் கிராமத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் தெரியப்படுத்தும் விதமாக 04.04.2016 அன்று நெடுவாசல் மற்றும் கொக்கூர் கிராமங்களில் வயல்தின விழா கொண்டாடப்பட்டது. திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் அ.அனுராதா, விஞ்ஞானிகள் முனைவர் ரா.ரவி, முனைவர் செ.திலகம், முனைவர் மு.அழகர் மற்றும் 34 பயறு உற்பத்தி செய்யும் விவசாயிகளும் கலந்து கொண்டனர்.



## பல்வகை தீவனப் பயிர்கள் - முதல் நிலை செயல் விளக்கம்





இந்நிலையத்தின் மூலம் பல்வகை தீவனப் பயிர்களான தீவனச் சோளம் (COFS31) வேலிமசால் மற்றும் அகத்தி மற்றும் கம்பு நேப்பியர் புல் (CO5) கரணைகள் ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு ஒருங்கிணைந்த பண்ணையம் செய்யும் விவசாயிக்கு வழங்கப்பட்டு 0.5 ஏக்கர் நிலத்தில் முதல்நிலை செயல்விளக்கத் திடலின் மூலம் உதவிப்பேராசிரியர் (பண்ணை இயந்திரவியல்) முனைவர் ப.காமராஜ் அவர்கள் பயிற்சியளித்து வருகிறார். மேலும் கள ஆய்வின் போது பயிர்களின் வரிசைக்கு வரிசை இடைவெளி மற்றும் செடிக்குச் செடி இடைவெளி அறுவடை செய்யும் காலம் பசுந்தாள் மகசூல் இதனால் ஏற்படும் பால் உற்பத்தி அதிகரிப்பு பற்றி விளக்கி வருகிறார். 10.05.2016 அன்று வண்டலூர் (கீழ்வேளூர்) கிராமத்தில் கள ஆய்வுப்பணி மேற்கொள்ளப்பட்டது. இதில் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் அ.அனுராதா, திட்ட உதவியாளர் (தொழில்நுட்பம்) திரு. வீ. ஞானபாரதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தோட்டக்கலைப் பயிர்களில் நவீன சாகுபடி தொழில்நுட்பங்கள் பயிற்சி



நாகப்பட்டினம் மாவட்டம் ஓய்வூதியர்கள் கட்டிட அலுவலகத்தில் தோட்டக் கலைத் துறையின் மூலம் 09.06.2016 அன்று தோட்டக்கலைப் பயிர்களில் நவீன சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் இந்நிலைய தோட்டக்கலை உதவிப் பேராசிரியர் முனைவர் ம.தமிழ்ச்செல்வன் அவர்கள் கலந்து கொண்டு தோட்டக்கலைப் பயிர்களில் நவீன சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றிய விளக்கத்தினை அளித்தார். வனவியல் உதவிப் பேராசிரியர் ரா.ரவி அவர்கள் காடுகள் வளர்ப்பு, அதன் முக்கியத்துவம் மற்றும் சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றி எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் நாகை மாவட்டத்தைச் சேர்ந்த 46 விவசாயிகள் கலந்து கொண்டனர். முன்னதாக நாகை மாவட்ட தோட்டக்கலைத்துறை அலுவலர் திரு. நீதிமாணிக்கம் வரவேற்புரை ஆற்றினார். பயிற்சியின் முடிவில் தோட்டக்கலை உதவி அலுவலர் நன்றி கூறினார்.

## நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை



23.06.2016 அன்று நெடுவாசல் கிராமத்தில் குறுவை நெற்பயிருக்கான ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த களப்பயிற்சி நடத்தப்பட்டது. இதில் விதைப்பு முதல் அறுவடை வரை விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய ஒருங்கிணைந்த தொழில்நுட்பங்கள் விரிவாக எடுத்துரைக்கப்பட்டன. விதை நேர்த்தி மற்றும் களை மேலாண்மை குறித்து செயல்விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டன. இதில் 16 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## பள்ளி மாணாக்கர் களப்பயணம்





தினகரன் 4.7.16 பக்கம்.14

வேளாண் அறிவியல் மையத்துக்கு மாணவ, மாணவிகள் களப்பயணம்

நாகை ஒன்றியம், ஒரத்தூர் சிதம்பரனார் நடுநிலைப்பள்ளியில் 8 ஆம் வகுப்பு பயிலும் 28 மாணவ, மாணவிகள் இந்நிலையத்திற்குக் களப்பயணமாக அழைத்து வந்திருந்தனர். மாணவ, மாணவிகளை நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் அ.அனுராதா அவர்கள் வரவேற்று வேளாண்மை அறிவியல் நிலையத்தின் நோக்கம் மற்றும் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தார். மாடித்தோட்டம் அமைத்தல், இயற்கை உரங்களைப் பயன்படுத்துதல், ஒரு குடும்பத்தின் உணவுத் தேவை, சரிவிகித உணவுத் தேவையை மாடித்தோட்டத்தின் மூலமாகப் பூர்த்தி செய்தல் மற்றும் தேங்காய் நார் பயன்படுத்தி இயற்கை உரம் தயாரித்தல் பற்றி தோட்டக்கலை உதவிப் பேராசிரியர் முனைவர். ம.தமிழ்ச்செல்வன் அவர்கள் விளக்கம் அளித்தார். காடுகளின் அவசியம், மரக்கன்று வளர்க்கும் விதம் மற்றும் மண்புழு உரம் தயாரித்தல் குறித்து வனவியல் உதவிப் பேராசிரியர் முனைவர் ரா.ரவி அவர்கள் பயிற்சி அளித்தார். மனையியல் உதவிப் பேராசிரியர் முனைவர் ஜெ.செல்வி அவர்கள் அசோலா பயிரிடும் முறை மற்றும் மூலிகைச் செடி வளர்ப்பின் அவசியம் குறித்து எடுத்துரைத்தார்.

## கள ஆய்வுகள்

20.05.2016 அன்று திருமருகல் வட்டாரத்தில் கோடை மழையால் பாதிக்கப்பட்ட பருத்தியில் நேரடி வயல்வெளி ஆய்வு மேற்கொண்டு பரிந்துரைகள் வழங்கப்பட்டது.









20.05.2016 அன்று நாகப்பட்டினத்தில் மாந்தோப்பில் நேரடி வயல்வெளி ஆய்வு மேற்கொண்டு பரிந்துரைகள் வழங்கப்பட்டது.



23.06.2016 அன்று நெடுவாசல் கிராமத்தில் முதல் நிலை செயல் விளக்க திடல் பருத்தியில் ஆய்வு மேற் கொண்டு சாறு உறிஞ்சும் பூச்சிகளை இயற்கை முறையில் கட்டுப் படுத்துவது குறித்து பரிந்துரைகள் வழங்கப்பட்டது.

23.06.2016 அன்று நெடுவாசல் மற்றும் ஆனை மட்டம் கிராமங்களில் கோடை உளுந்தில் ஏற்பட்ட பூச்சி மற்றும் நோய் தாக்குதலுக்கு நேரடி வயல்வெளி ஆய்வு மேற் கொண்டு பரிந்துரைகள் வழங்கப்பட்டது.



## விதைகள் மற்றும் இடுபொருள்கள் விற்பனை

விவசாயிகளுக்குக் கீழ்க்கண்ட விதைகள் மற்றும் இடுபொருள்கள் விற்பனை செய்யப்படுகிறது.

1. விதைநெல்
2. சூடோமொனஸ்
3. மண்புழு உரம்
4. அசோலா
5. தென்னை நார்க்கழிவு உரம்
6. தீவனப்புல் கரணைகள்
7. தென்னை டானிக்
8. காய்கறி விதைகள்
9. மரக்கன்றுகள்
10. தென்னங்கன்றுகள்



## மண் மாதிரிகள் எடுக்கும் முறை செயல்விளக்கம்





கீழையூர் வட்டாரம் தாண்டவமூர்த்தி காட்டில் 30.06.2016 அன்று மண் மாதிரி எடுக்கும் முறை குறித்த செயல்விளக்கம் நடத்தப்பட்டது. மண் மாதிரி எடுத்த பின் அவசியம் குறித்தும் முறைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. 18 விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். நிலைய தொழில்நுட்ப திட்ட உதவியாளர் திரு. வீ.ஞானபாரதி அவர்கள் செயல்விளக்கத்தைச் செய்து காண்பித்தார்.

## இணைய வழி தகவல் தொழில்நுட்ப சேவைகள்

இந்நிலையத்தின் மூலம் மாவட்டத்திற்கு ஏற்ற வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த தொழில் நுட்பங்கள் உழவர் மக்களிடையே பல்வேறு ஊடகங்கள் மூலம் பரவலாக்கம் செய்யப்படுகின்றன. அவற்றில் இணைய வழிச் சேவைகளாக

- இணையத்தின் வலைதளம் **www.kvknagapattinam.com**

  முகநூல் **www.facebook.com/kvk.nagappattinam**
- வேளாண் அறிவியல் நிலைய வலைதளம் **(kvk.icar.org.in)**
- அலைபேசி வழிக்குறுஞ்செய்திகள்
- கட்செவி செயலி **(whatsapp)** தகவல் பரிமாற்றம்

சமூக ஊடகங்களின் தாக்கம் விவசாயிகளையும் பரவலாகச் சென்றடைந்து வரும் இந்நாளில் நிலையத்தின் புதிய முகநூலில் நிலைய செயல்பாடுகளையும் நவீன தொழில்நுட்பங்களைப் பரவலாக்கம் செய்யும் வகையில் புகைப்படங்கள் மற்றும் வீடியோ உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகிறது. இந்தத் தகவல் பரிமாற்றம் உழவர் பெருமக்களுக்கு மிகப்பெரிய ஊக்கத்தை அளிக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.




நாகை மாவட்டம் உழவர் பெருமக்களின் வசதிக்காக அலைபேசி வழியாக இலவச குறுந்தகவல்கள் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் உழவர்கள் ஒவ்வொரு பருவத்திற்கு ஏற்ப பயிர்களின் தொழில்நுட்பங்கள், சந்தை நிலவரங்கள், கால்நடை கோழி மற்றும் மீன் வளர்ப்பு தொழில்நுட்ப தகவல்களைத் தினசரி குறுந்தகவல்கள் மூலம் பெற்றிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே ஆர்வமுள்ளவர்கள் தங்களது கைப்பேசி எண்ணை 04365 - 246266 என்ற எண்ணில் தொடர்பு கொண்டோ அல்லது நிலையத்திற்கு நேரில் வந்தோ பதிவு செய்து இந்த வசதியைப் பெற்று பயன்பெறுவீர்

சிறப்பாசிரியர் :

முனைவர் **ஹெ.பிலிப்** விரிவாக்க கல்வி இயக்குநர்

ஆசிரியர் :

முனைவர் **அ.அனுராதா** திட்ட ஒருங்கிணைப்பாளர்

இணை ஆசிரியர் :

முனைவர் **செ.திலகம்** உதவிப் பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)

ஆசிரியர் குழு :

முனைவர் **ப.காமராஜ்** உதவிப் பேராசிரியர் (பண்ணை இயந்திரவியல்)

முனைவர் **ம.தமிழ்ச்செல்வன்** உதவிப் பேராசிரியர் (தோட்டக்கலை)

முனைவர் **ரா.ரவி** உதவிப் பேராசிரியர் (வனவியல்)

முனைவர் **மு.அழகர்** உதவிப் பேராசிரியர் (பூச்சியியல்)

முனைவர் **ஜெ.செல்வி** உதவிப் பேராசிரியர் (மனையியல்)

திரு. **ரெ.வேதரெத்தினம்** பண்ணை மேலாளர்

திரு. **அக்ரி.வீ.ஞானபாரதி** திட்ட உதவியாளர் (தொழில்நுட்பம்)

பொறியாளர் **இரா.சகுந்தலா** திட்ட உதவியாளர் (கணினி)

**உழவரின் வளரும் வேளாண்மையில்**

சந்தாதாரராக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

ஆசிரியர்

**உழவரின் வளரும் வேளாண்மை**

**விரிவாக்கக் கல்வி இயக்ககம்**

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம்

கோயம்புத்தூர் - 641 003

தொலைபேசி எண் : 0422 - 6611538

பெறுநர்

திரு./திருமதி..............................................................

அவர்கள்

..............................................................

..............................................................

அனுப்புநர்

திட்ட ஒருங்கிணைப்பாளர்,

வேளாண்மை அறிவியல் நிலையம்

சிக்கல், நாகப்பட்டினம் - 611 108.

தொலைபேசி : 04365 - 246266

மின்னஞ்சல் : kvksikkal@tnau.ac.in

வலைதளம் : www.kvknagapattinam.com